**செய்தி வெளியீடு எண் : 1791** **நாள் : 12.10.2022**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாட்டில், சிவகாசியைச் சுற்றியுள்ள இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, விதிமுறைகளுக்கு உட்பட்ட பட்டாசுகளின் விற்பனையை தில்லியில் அனுமதிக்குமாறு கோரி, மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்**

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், பட்டாசு விற்பனைக்கு ஒட்டுமொத்தமாக தடை விதிக்கக் கூடாது என்று குறிப்பிட்டு, விதிமுறைகளுக்கு உட்பட்ட பட்டாசுகளை விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் கோரி, 13-10-2021 அன்று, மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்களுக்கு தாம் எழுதியிருந்த கடிதத்தை நினைவு கூர்ந்துள்ளார்.

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, பண்டிகை காலங்களில் இரண்டு மணி நேரம் பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படுகிறது என்று தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பண்டிகைக் கால கொண்டாட்டத்தின் அடையாளமாக பட்டாசுகளை வெடிப்பது என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்படும் நாடுகள் உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைதான் என்றும் தெரிவித்துள்ளார். இந்திய நகரங்களில் காற்று மாசுபாட்டிற்குப் பங்களிக்கும் காரணிகளாக வாகனங்கள் மற்றும் தொழில்துறை உமிழ்வுகள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒருசில நாட்களுக்குப் பயன்படுத்தப்படும் பட்டாசுகளால் மிகக்குறைந்த அளவிலான மாசு ஏற்படும் என்பதால், பட்டாசு உற்பத்தியில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தினைக் கருத்தில்கொண்டு, உரிமம் பெற்ற வணிகர்கள் மூலம் அறிவியல் முறைப்படி உருவாக்கப்பட்ட பசுமைப் பட்டாசுகளை விற்பனை செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது என்று தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேறு எந்த மாநிலமும் பட்டாசுக்கு முழுமையாகத் தடை விதிக்காதபோது, தில்லியில் தடை விதிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள், இந்தத் தடையை மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்கள் நீக்குவதன் மூலமாக, தமிழ்நாட்டில், சிவகாசியைச் சுற்றியுள்ள இலட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக வாழ்வாதாரத்திற்காக இந்தத் தொழிலை நம்பியிருக்கும் கிராமப்புற பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிட இயலும் எனக் குறிப்பிட்டு, விதிமுறைகளுக்கு உட்பட்ட பட்டாசுகளின் விற்பனையை தில்லியில் அனுமதிக்குமாறு மாண்புமிகு தில்லி முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

******

## PRESS RELEASE

**Text of the D.O. Letter of Thiru. M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to Thiru. Arvind Kejriwal, Hon'ble Chief Minister of Delhi requesting to permit the sale of firecrackers that fall within the permissible norms.**

Your kind attention is invited to my earlier D.O. letter dated 13-10-2021 urging you not to impose a blanket ban on the sale of firecrackers and requesting to permit the sale of firecrackers that fall within the permissible norms.

I would like to reiterate the same request pointing out that the Apex Court has allowed bursting of firecrackers for two hours on festive occasions. Bursting of crackers as a mark of celebration is an internationally accepted practice, including in highly environmentally proactive countries. You would appreciate that there are several contributing factors for air pollution in Indian cities which include vehicular and industrial emissions. Hence this calls for a balanced view, taking into consideration the negligible incremental pollution potential of crackers used for a few days and the livelihoods involved. Further, green crackers have been scientifically developed and the Supreme Court has permitted the sale of green crackers through licensed traders.

I sincerely urge you to permit the sale of firecrackers that fall within the permissible norms. When no other State has imposed a total ban on firecrackers, your kind act will light up the lives of lakhs of people around

Sivakasi, especially rural women who depend on this industry for livelihood as Diwali accounts for 70% of their annual business.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in